**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 04.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 94/SCIC/2022

திரு T. சுரேஷ்ரெட்டி — மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மேற்பார்வையாளர்,
ஓசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், ... பொது அதிகார அமைப்பு
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம்,
ஓசூர்,

## ஆணை

இவ்வழக்கானது ஏற்கனவே 28.10.2024 தேதியன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

- **மனுதாரரின் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல்மேல்முறையீட்டு மனுவிற்கு மேல்முறையீட்டு அலுவலரால் எந்தவித தகவல்களும் வழங்கப்படாத காரணத்தால் அப்போது பணியிலிருந்து மேல்முறையீட்டு அலுவலர், தற்போது வேலூர் இணைஇயக்குநராகப் பணிபுரியும் திரு சண்முகம், என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1)**

**மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை 15 தினங்களுக்குள் அளிக்கவேண்டும்.**

- **முன்னாள் மேல்முறையீட்டு அலுவலரின் விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், அவரிடமிருந்து பெற்று, 06.12.2024 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும்.**

2. மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க **திரு வெ. உத்தரவேல், பொதுத் தகவல் அலுவலர் / மேற்பார்வையாளர், ஓசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் நேரில் ஆஜராகி, முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர், திரு கி. சண்முகம், தற்போது இணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மாவட்டம்** என்பவரின் காரண விளக்கங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. *மேற்குறிப்பிட்ட முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்* திரு கி. சண்முகம், தற்போது இணை இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மாவட்டம் *அவரிடமிருந்து பெறப்பட்ட காரண விளக்கங்கள் ஆணையத்தால் பரிசீலனை செய்யப்பட்டு அவரது விளக்கம் ஏற்றுகொள்ளப்படுகிறது. எனவே, இதில் மேல்நடவடிக்கை ஏதும் தேவையில்லையென்று கருதி* ***இந்த புகார் மனுவின் மீதான விசாரணை ஆணையத்தால் முற்றாக்கம் செய்யப்படுகிறது.***

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ.்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 94/SCIC/2022</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மேற்பார்வையாளர்,
ஓசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம்,
ஓசூர்,

திரு கி. சண்முகம்,
இணை இயக்குநர்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம்,
2வது தளம், முன்னாள் படைவீரர் மைய வளாகம்,
கோட்டை சுற்று சாலை,
பெரியார் பூங்கா எதிரில், வேலூர் 632 001
(**முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்/**
**ஓசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம்,**
**மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், ஓசூர்**).

**மனுதாரர்:-**

Thiru T. Suresh Reddy,
S/O (Late) M. Thimmaraya Reddy,
132/4- Dhasarapalli Village, Poonapalli Panchayat,
Hosur Taluk, 635 114
Krishnagiri District.

**நகல்**

இயக்குநர்,
நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம்,
சீனிவாச நகர், விருகம்பாக்கம்,
கோயம்பேடு, சென்னை 600 107

Copy to: File TK/PS